1991 செப்டம்பர் 23] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களுக்கு பதில் கூறுகிறபோது

* * * * * * *

என்று சொல்லியிருக்கிறார். அது இந்த நேரத்தில சரியாக இருக்காது. அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை (24—9—1991) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 6-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

106. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 24—1—1991-ஆம் நாளிட்ட 24-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்பு சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

107. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) அதிகரிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 12—4—1991-ஆம் நாளிட்ட 411-ஆம்எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) அங்கீகரிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29!1974 57(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

108. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.